ஜோலார்பேட்டை–கிருஷ்ணகிரி–ஒசூர், இரயில் பாதை அமைக்கும் திட்டத்தை மத்திய அரசிடம் வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி தொகுதி, காவேரிப்பட்டினம் அரசு மேல்நிலைப் பள்ளி முதல் தென்பெண்ணையாறு தேசிய நெடுஞ்சாலைக்குச் சொந்தமான சாலையின் வலதுபுறத்தில் கழிவுநீர்க் கால்வாய் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி தொகுதி, காவேரிப்பட்டினம் ஒன்றியம், கோவிந்தராஜபுரம், நத்தம் புறம்போக்கில் குடியிருப்பவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி தொகுதி, காவேரிப்பட்டினம் ஒன்றியம், தென்பெண்ணையாற்றின் அருகில் சந்தாபுரத்தில் தடுப்பணை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி புறநகர் பேருந்து நிலையம் அருகில் ராயக்கோட்டை மேம்பாலம் முதல் ஒருங்கிணைந்த மாவட்ட நீதிமன்றம் வரை சென்டர் மீடியன் ஏற்படுத்தி இருபுறச் சாலையையும் அகலப்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள். பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (23–3–2022) புதன்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–27 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

32. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் நாற்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

2022 மார்ச் 22]

33. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் நாற்பத்து ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம்1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

34. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் நாற்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

35. 2019–2020 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் முப்பத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

36. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தொண்ணூற்று இரண்டாவது ஆண்டறிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டம் 323(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

37. 2016–2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் நாற்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

38. 2017–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் நாற்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

39. 2018–2019 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் நாற்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

[*2022 மார்ச் 22*

40. 2019–2020 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் ஆண்டறிக்கை. [*1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*] *(தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

41. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் இருபத்து ஏழாவது ஆண்டறிக்கை. [*1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*] *(தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

ஏதுமில்லை.